පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - 290

ආයතනයේ නම - ඉඩම් අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற அமர்வு இலக்கம் – 290

நிறுவனத்தின் பெயர் - காணிஅமைச்சு

பொதுக் கணக்குகளுக்கான பாராளுமன்றத்தின் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இல. 119 (4) இன் கீழ் நிறுவனத்துக்குப் பொறுப்பு வகிக்கும் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல்.

Parliament Session Number – 290

Name of the Institute - Ministry of Lands

Submission of the observations and steps taken by the Hon. Minister in charge of the institute under the standing order No 119(4) related to the reports tabled into the parliament by the Committee of Public Accounts (COPA) to the parliament.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் அடிப்படையில் அரசகணக்காய்வுக் குழுவின் மூலம் பாராளுமன்றத்திற்குமுன்வைக்கப்பட்டஅறிக்கைதொடர்பிலானஅவதானிப்புகள் மற்றும் அதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்டதீர்மானங்களைமுன்வைத்தல்

பாராளுமன்றவெளியீட்டுத் தொடர் - 290

நிறுவனத்தின் பெயர்: காணிஅமைச்சு

	குழுவின் மூலம் கண்டறியப்பட்ட பலவீனங்கள் அல்லுத குறைபாடுகள்	அவற்றை சரிசெய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய நிலைமை
01	உள்ளகக் கணக்காய்வு விமர்சனங்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் வழங்காமை.	அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின்போது ஒரு மாத காலம் தாண்டிய கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக கலந்துரையாடி அதற்கான பதில்களை வழங்குவதற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
02	வருடாந்த பொருள் இருப்பு மதிப்பீட்டின்போது கண்டறியப்பட்ட மேலதிக இருப்பு அல்லது குறைபாடுகள் தொடர்பிலான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுக்காமை.	தற்போதைய நிலையில் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.
03	ஆரச வாகன அனர்த்தம் தொடர்பில் நி.ஏ. 103, 104, 109 மற்றும் 110 ஆகியன தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை.	வுாகன அனர்த்தங்கள் தொடர்பாகக் காணப்படுகின்ற தாமதங்களைத் தடுப்பதற்கு பிரயோக அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முறைமைகள் அடையாளங் காணப்பட்டு அது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசேட பயிற்சி வேலைத்திட்டங்கள் சாரதிமார்களை இலக்காகக் கொண்டு 2021 மற்றும் 2023 ஆம் வருடங்களில் நடாத்தப்பட்டதோடு Skills Development Fund LTD நிறுவனத்தில் இடம்பெற்ற போக்குவரத்து

		முகாமைத்துவம் தொடர்பான நிகழ்நிலை வேலைத்திட்டத்தில் போக்குவரத்து உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். 2021 ஆம் ஆண்டளவில் வாகனஅனர்த்தம் தொடர்பாக நிறைவுசெய்யப்படாத 14 நி.ஏ. விசாரணைகள் காணப்பட்டதோடு அவற்றுள் 11 நிறைவுசெய்யப்பட்டுள்ளன. கோவிட் - 19 தொற்று நிலவிய காலப்பகுதிக்குள் காணப்பட்ட பிரயோக அடிப்படையிலான நி.ஏ விசாரணைகளை மேற்கொள்வதற்கு தாமதங்கள் ஏற்பட்டன. அமைச்சரவை ஊழியர் குழாத்தினருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் வாகன அனர்த்தங்கள் தொடர்பாக காணப்படும் குறைபாடுகளைச் (பொலிஸ் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தாமதமானதன் காணரமாக) சரிசெய்து கொண்டு ஏனைய அனர்த்தங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே தற்போதைய நிலையில் அமைச்சர் ஊழியர் குழாத்தின் பொருட்டு ஒன்றிணைந்த சேவை ஊழியர்கள் அதிகளவு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன்.
04	2016.12.29 ஆம் திகதிய 2016/30 இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய வாகனங்களின் எரிபொருள் பாவனைத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளாமை.	எரிபொருள் பாவனைத் தொடர்பான விசாரணை 2021 ஆம் ஆண்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டாலும், 2020, 2021 ஆகிய காலப்பகுதிக்குள் காணப்பட்ட கோவிட் - 19 தொற்று காரணமாக கடமைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதில் இடைஞ்சலகள் ஏற்பட்டதோடு எரிபொருள் பாவனை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதிலும் பிரயோக அடிப்படையிலான சிக்கல்கள் ஏற்பட்டன. பின்னர் ஏற்பட்ட எரிபொருள் சிக்கல் காணரமாக அமைச்சின் வாகனப் பாவனையைக் குறைத்து அரச செலவுகளை முகாமை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு 2023 ஆம்

		வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் விநியோக அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டமையினால் எரிபொருன் விசாரணை தொடர்பான பிரயோக அடிப்படையிலான மற்றும் உற்பத்தித்திறன் சார் பிரச்சினைகள் ஏற்பட்டன. என்றாலும் 2024 ஆம் வருடத்தில் முறையாக எரிபொருள் பாவனை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
05	பிரஜைகள் /சேவைபெறுநர் பிரமாணங்களை முறையாகத் தயார்படுத்தி நடைமுறைப்படுத்தாமை.	2021.12.29 ஆம் திகதியளவில் பிரஜைகள் /சேவைபெறுநர் பிரமாணங்கள் முறையாகத் தாயர்படுத்தப்பட்டு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மிஹிகெத்த மெதுர கட்டடத்துக்குள் அமைச்சின் அலுவலகத்தைத் தவிர வேறு இரு அலுவலகங்கள் காணப்படுவதனால் பிரமாணத்தைக் காட்சிப்படுத்துவது எந்த இடத்தில் என்பது தொடர்பாகக் காணப்படுகின்ற பிரச்சினை மற்றும் அதற்கானஒதுக்கீடுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற பிரச்சினைகள் என்பன காரணமாகவும் அதேநேரம், அமைச்சின் விடயத் தலைப்பு சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு என மாற்றம் பெற்றமையினாலும் ஏற்கனவே காணி அமைச்சுக்கு ஏற்றவாறு தயார்படுத்தப்பட்ட பிரமாணத்தை பௌதீக அடிப்படையில் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தற்போதைய நிலையில் பிரமாணத்தை பௌதீக அடிப்படையில் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

06	பிரஜைகள் /சேவைபெறுநர் பிரமாணம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ள நிறுவனத்தினால் முறைமை ஒன்றினை தயார்படுத்தாமை.	இன்றைய நிலையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்ற பொறுப்பு ஒவ்வொரு பிரிவுகளிற்கும் பொறுப்பாக இருக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.
07	முழு அலுவலக குழாத்தினரும் உள்ளடங்கும் வகையில் செயற்திறன் உடன்படிக்கை தயார்படுத்தப்பட்டு அது முறையாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படாமை.	2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்கான முழு அலுவலகக் குழாத்தினருக்குமான செயற்திறன் உடன்படிக்கை தாயர்படுத்தப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் அடிப்படையில் அரச கணக்காய்வுக் குழுவின் மூலம் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பில்

மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை முன்வைத்தல் பாராளுமன்ற

வெளியீட்டுத் தொடர் - 290

நிறுவனத்தின் பெயர்: காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

தொ. இல	2021 ஆம் ஆண்டுக்கான குறித்த செயற்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் அடையாளங் காணப்பட்ட பலவீனங்கள்	பலவீனங்களின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
01	கணக்காய்வாளர் நாயகத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு விமரச்னங்களின் பொருட்டும் ஒரு மாத காலதத்திற்குள்ளாக பதில் அளிக்காமை	நாடடி ல் காணப்பட்ட கொரோனா தொற்று காரணமாக அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையிலான அலுவலகங்களிடமிருந்து தகவ ல்கள் கிடைக்கப்பெறுவதற்குத் தாமதமானதன் காரணமாக பதில்களைத் தாயரிப்பதற்கு சிறிதளவு காலம் தேவைப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்து அனைத்து கணக்காய்வு விமரச்னங்களின் பொருட்டும் ஒரு மாத காலப பகுதிக்குள பதில் அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேறகொளவ்தாக அ றியத் தருகின்றேன்.
02	உள்ளக கணக்காய்வு விமரச்னங்களின் பொருட்டு ஒரு மாத காலதத்திற்குள் பதில் அளிக்காமை.	நாடடி ல் காணப்பட்ட கொரோனா தொற்று காரணமாக அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையிலான அலுவலகங்களிடமிருந்து தகவல்கள் கிடைக்கப்பெறுவதற்குத் தாமதமானதன் காரணமாக பதில்களைத் தாயரிப்பதற்கு சிறிதளவு காலம் தேவைப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்து அனைத்து கணக்காய்வு விமரச்னங்களின் பொருட்டும் ஒரு மாத காலப பகுதிக்குள பதில் அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேறகொளவ்தாக அறியத் தருகின்றேன்.
03	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் கீழ் 2018.08.01 ஆம திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காமை.	காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் தொடரபில் மேறகொள்ளப்பட்ட குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் 2019, 2020, 2021, 2022 மறறும் 2023 ஆகிய வருடங்களுக்கான பிரதிகள தொலைநகல் (நஅயடை) மூலம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

04	வாகனம் ஒன்று செயலிழந்து 08 மாதங்களை விட குறைந்த காலப்பகுதிக்குள் அதனை அகற்றுவதற்குத் தேவையான நடவடிகல்க மேற்கொளள்ாமை.	திணைக்களத்திற்குச் சொந்தமான பயணிக்க முடியாத வாகனங்கள் தொடர்பில் தீர்மானம் மேறெ காள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2022.09.30 ஆம் திகதி அன்று கிடைக்கப் பெற்றதோடு, அதன் மூலம் 06 வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
		அதனடிப்படையில் 54-4013 மறறும் 54-4012 ஆஜவுளுருடஜளுர்ஜ கெப் வாகனங்கள் இரண்டு திருத்தப்பட்டு தற்போது பயணிக்கக்கூடிய நிலையில் திணைக்களத்தின் இரு பிரதேச அலுவலகங்களுக்கு ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுளள்து. அவ்வாறே, 32-1187 மறறும் 32-3295 ஆஜவுளுருடஜளுர்ஜ ுநுதுநுசுழு வாகனங்கள் இரண்டின் திருத்த வேலைகளின் பொருட்டு பெரியதொரு தொகையினைச் செலவு செய்ய வேண்டியுளள்மையினால் 2023.11.09 ஆம் திகதி விவசாய மறறும் கமநல பாதுகாப்புச் சபைகக் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. முர் – 5690 மற்றும் முர் 5694 ஆஜஊசுழு முசுழுே ஆகிய இரு வாகனங்களையும் அகற்றும் நடவடிக்கை தற்போது காணி மறற்ம் சுறறுலாதது றை அமைச்சின் மூலம் மேறகொளள்ப்பட்டு வருகின்றது.
05	அரச வாகன அனர்த்தம் தொடரபில் நி.ஏ. 103, 104, 109 மறறும் 110 ஆகியன தொடரபில் தேவையான நடவடிக்கைகள் மேறகொளள்ாமை.	2023.12.31 ஆம் திகதியாகும்போது திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக யே 9290 கோவையினைத் தவிர ஏனைய அனர்த்தக் கோவைகள் தொடரப் ில் நி.ஏ. 103, 104, 109 மற்றும் 110 இன் அடிப்படையி ல் தேவையான நடவடிக்கைகள் மேறகொளள் ப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. யே 9290 வாகனம் தொடரப்பான சார திக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேறகொளவ்தன் பொருட்டு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் மூலம் வழஙகப்பட்டிருக்கும் அறிவுரைகளுக்கு ஏற்ப குழு ஒன்று அமைக்கப்பட்டு இது தொடரபிலான விசாரணைகள் தற்போது இடம்பெறற்வண்ணமுள்ளன. மேறப்டி விசாரணையின பின்னர் திணைக்களத்தின் மூலம் மேறகொளள்ப் பட்ட செலவினை நி.ஏ.109 இன் அடிப்படையில் ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேறகொளள்ப்படும்.

06	2016.12.29 அம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்கு அமைவாக அலுவலகங்களில் காணப்படும் வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடரபில் பரீட்சிப்பு ஒன்றினை மேறகொள்ளாமை.	நாடட்ில் காணப்படுகின்ற தற்போதைய நிலைமையி ல் அரச செலவுகளை முகாமை செய்யும் நோக்குடன் மேறகொளள்ப்பட்டிருக்கும் கொளல்கரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் எரிபொருளிற்கான ஒதுக்கடீ மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, கடந்த காலங்களில் வாகனங்களுக்கான எரிபொருள ஒதுக்கட்டு அடிப்படையில் வழங்கப்பட்டமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் முறைமையின் ஊடாக எரிபொருள தொடரப்ான பரீட்சிப்பினை மேறகொளவ் து பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி தற்போதைய நிலைமைக்கு ஏற்ற மிகவும் பொருத்தமான மறறும் சிக்கனமான முறையில் எரிபொருள பாவனை பரீட் சிப்பினை
		மேறகொளவ்தற்கான இயலுமை தொடரபில் எனது இலக்கம் LCGD/AD/15/81 மற்றும் 2023.04.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவன பணிப்பாள ர் நாயகம் அவர்களிடமிருந்து அறிவுரைகள் கோரப்பட்டுளள்தோடு, அவரால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு ஏற்ற வகையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொளள்ப்படும்.
07	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் மூலம் கண்டறியப்பட்ட சமப்படுத்தப்பட வேண்டிய மிகுதி தொடர்பில் நி.ஏ. அடிப்டையில் ஒரு மாத காலப் பகுதிக்குள தீர்க்கப்படாது காணப்படுகின்றமை.	சமப்படுத்தப்பட வேண்டிய அனைத்து மிகுதிகளும் சீர்செய்யப்பட்டுளள்ன.
08	நி.ஏ 94(1) இன் அடிப்படையில் செலவு தொடரப்ாகத் தாயர்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கடீகளைப் பயன்படுத்தியதன் பின்னர் மிகுதியாகக் காணப்படும் ஒதுக்கடீ அனுமதிக்கப்பட்ட எல்லையினையும் தாண்டி பொறுப்புகளை ஏற்படுத்திக் கொண்டுளள்மை.	குறித்த வருடத்துகக்ான ஒதுக்கட்டின் பாவனையின் பின்னர் மிகுதியாக உள்ள ஒதுக்கட் டின் எல்லையினைத் தாண்டி பொறுப்புகள் ஏற்று க் கொளள்ப்படவில்லை.
09	பொது வைப்புக கணக்கின் காலம் கடந்த வைப்புத் தொடரபில் நி.ஏ.571 இன் கீழ் நடவடிக்கை மேறகொளள்ாமை	2021.05.04 ஆம திகதிய அ.அ.ப 21/0613/322/006 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் மிஹிகத்த மெதுர நான்காவது மாடிய னை நிர்மாணிப்பதற்கு பொறியியல் அடிப்படையிலான விடயங்கள் தொடரபில் மத்திய அறிவுரைப் பணியகத்திற்கு செலுத்தாது தடுத்து வைத்துக் கொளவ்தற்கான அங்ககீாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போது இந்த மாடியின் நிர்மாணப் பணிகள் இடம்பெறறு வருவதனால் பகுதி அடிப்படையில் வைப்புப் பணம் சீர்செய்யப்படுகின்றது.

10	நி.ஏ. 371 இன் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட தேவைக்கேற்ற் பணிமுற்பணம் குறித்த விடயம் நிறைவடைந்து ஒரு மாத காலப் பகுதிக்குள் தீர்கக்ப்படாமை.	உததியோகத்தர்களுக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்துவதன் மூலம் இந்த பலவீனமான செயற்பாடடினை மிகவும் குறைந்த மட்டத்தில் பேணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் பின்தொடரல் நடவடிக்கைகளை மேறகொ காண்டு இந்த தேவைக்கேற்ற் பணிமுற்பணத் தேவைகளை நிறைவு செய்தவுடன் உடனடியாக அவற்றினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள மேறகொளள் ப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.
11	அனுமதிக்கப்பட்ட கடடுநிதிக் கணக்குமீதி திறைசேரியின் ஏடுகளுடன் காலாண்டு அடிப்படையில் இணக்கம் செய்யப்பட்ட கடடுநிதி இணக்கக் கூற்றினை குறித்த திகதிக்கு முன்னர் திறைசேரிச்	காலாண்டு அடிப்படையில் இணக்கம் செய்யப்பட்ட கடடுநிதி இணக்கக் கூற்றினை நியமிக்கப்பட்டவாறு திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேறகொளள்ப்பட்டடுளள்ன.
	செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைக்காமை. ...	
12	உழைக்கப்பட்ட வருமானத்தி னை நேரடியாக வருமானத்தில் வரவு வைத்தலோ அல்லது அதனை வைப்புக கணக்கில் தக்க வைத்துக கொண்டு ஒரு மாதத்தினை விடவும் குறைந்த காலப் பகுதிக்குள வருமானக் கணக்கில் வரவு வைத்தலோ செய்யாமை.	அனைத்து வருமானங்களும் அவை ஒன்று சேர்க்கப்படுகின்ற குறிப்பிடட் மாதத்திற்குள் பொது வைப்புக கணக்கில் வைத்துகொளள்ாது குறித்த வருமானத் தலைபபிற்குள வரவு வை க்கப்பட்டுள்ளன.
13	அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் எழுத்து மூலமாக அவர்களுடைய வேலைப் பணிகள் ஒப்படைக்கப்படாமை	2024 ஆம ஆண்டு முதல் அலுவல குழாத் தினருக்கு அவர்களுடைய வேலைப் பணி களை எழுத்து மூலமாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேறகொளள்ப்பட்டுள்ளன.

14	பிரஜைகள் / சேவை பெறுநர் பிரமாணங்களை முறையாக தயார்படுத்தி நடைமுறைப்படுத்தாமை	இத்திணைக்களமானது பிரதான அலுவலகம மற்று ம் மாகாணங்களுக்கிடையிலான 06 அலுவலகங்கள் மறறும் உதவிக் காணி ஆணையாளர் அலு வலகம் 02 ஆகியவற்றினைக் கொண்டமைந்த அரச காணி முகாமைத்துவம் தொடர்பில் விசேட செயற்பாடுகளை மேறகொளகின்ற ஒரு நிறுவனமாகும். இங்கு திணைக்களத்தின் செயற்பாடுகளை மேறகே காள்வதற்கு வேறு அரச நிறுவனங்கள மறறு ம் திணைக்களங்களின் மூலம் வெவ்வேறு பரிந்துரைகள மறறும் வெவ் வேறு தகவல்களைப் பெற்றுக் கொளவ்தற்கு நேரிடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு விடயத்தின் பொருட்டாயினும் அனுப்பப்படுகின்ற கடிதங்களில் காணப்பட வேண்டிய விடயங்கள் சரியான முறையில் பூரத்திசெய்யப்படாததன் காரணமாக மீள அதனை வரவழைத்துக கொளவ்தற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனால் எதிர்பார்க்கப்படும் காலத் தை விடவும் மேலதிக காலம் செலவாகும் அதேவேளை, அவ்வாறு செலவாகும் காலததினை குறிப்பிடடுச் சொல்ல முடியாத நிலையுள்ளது. இவ்வாறான நிலையில் இந்தத் திணைக களத்தின் பிரஜைகள / சேவைபெறுநர் பிரமாணம் காடச் ிப்படுத்துவதன் காரணமாக ஒரு சேவையினைப் பெற்றுக்கொள்வதற்குச் சமூகம் தருகின்ற சேவை பெறுநர்கள இருவருக்கு ஒரே நேரத்திற்குள் அந்தத் தேவையினைப் பூரத்திசெய்து கொளவ்தற்கு முடியாத நிலை ஏற்படும். எனவே, ஒவ்வொரு வேலைப் படிகளுக்கும் ஏற்ற வகையில் குறித்த நேர அடட்வணை ஒன்றினை வழங்குவ தற்கான ஏற்பாடுகள் காணப்படாததன் காரணமாக பிரஜைகள ; / சேவை பெறுநர் பிரமாணம் காடசிப்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்படுவதனால் இது தொடரபில் இலக்கம் LCGD/AD15/50 மறறு ம் 2023.11.27 திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர
		நாயகம் அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொளள்ப்பட்டுள்ளன.

15	பிரஜைகள் / சேவை பெறுநர் பிரமாணம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடரபில் கண்காணிப்பு மறறும் மதிப்பீடுகளை மேற்கொள்ள நிறுவனத்தினால் முறைமை ஒன்றினை தயார்படுத்தாமை	இத்திணைக்களமானது பிரதான அலுவலகம மற்றும் மாகாணங்களுக்கிடையிலான 06 அலுவலகங்கள் மறறும் உதவிக் காணி ஆணையாளர் அலு வலகம் 02 ஆகியவற்றினைக் கொண்டமைந்த அரச காணி முகாமைத்துவம் தொடர்பில் விசேட செயற்பாடுகளை மேறகொளகின்ற ஒரு நிறுவனமாகும். இங்கு திணைக்களத்தின் செயற்பாடுகளை மேறகொ காள்வதற்கு வேறு அரச நிறுவனங்கள் மறறு ம் திணைக்களங்களின் மூலம் வெவ்வேறு பரிந்துரைகள் மறறு ம் வெவ்வேறு தகவல்களைப் பெற்றுக் கொளவ்தற்கு நேரிடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு விடயத்தின் பொருட்டாயினும் அனுப்பப்படுகின்ற கடிதங்களில் காணப்பட வேண்டிய விடயங்கள் சரியான முறையில் பூரத்திசெய்யப்படாததன் காரணமாக மீள அதனை வரவழைத்துக் கொளவ்தற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனால் எதிர்பார்க்கப்படும் காலதத் தை விடவும் மேலதிக காலம் செலவாகும் அதேவேளை, அவ்வாறு செலவாகும் காலததினை குறிப்பிடடுச் சொல்ல முடியாத நிலையுள்ளது. இவ்வாறான நிலையில் இந்தத் திணைக்களத்தின் பிரஜைகள / சேவைபெறுநர் பிரமாணம் காடச் ப்படுத்துவதன் காரணமாக ஒரு சேவையினைப் பெற்றுக் கொளவ்தற்கு சமூகம் தருகின்ற சேவை பெறுநர்கள் இருவருக்கு ஒரே நேரத்திற்குள் அந்தத் தேவையினைப் பூரத்திசெய்து கொளவ் தற்கு முடியாத நிலை ஏற்படும். எனவே, ஒவ்வொரு வேலைப் படிகளுக்கும் ஏற்ற வகையில் குறித்த நேர அட்டவணை ஒன்றினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படாததன் காரணமாக பிரஜைகள / சேவை பெறுநர் பிரமாணம் காடசிப்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்படுவதனால் இது தொடரபில் இலக்கம் LCGD/AD15/50 மறறும் 2023.11.27 திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர நாயகம் அவர்களுக்கு ெ தரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொளள்ப்பட்டுள்ளன.
16	2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க பொது நிர்வாகச் சுறற்றிகக்கயின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறையாக தயார்படுத்தப்பட்ட மனித வளத் திடட்த்தினை ஒழுங்குமுறைப் படுத்தாமை.	2023 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலையில்2018 ஜனவரி 24 ஆம திகதிய 02/2018 பொது நிர்வாகச் சுறற்றிகக்கயின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மனித வளத் திட்டம் முறையாக தயார்படுத்தப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுளள்து.
17	தயார்படுத்தப்பட்ட மனித வளத் திடட்த்தின் மூலம் ஊழியர் குழாத்தினருள 50% இற்கும் அதிகமானவர்களுக்கு ஒரு வருடத்திற்கு குறைந்தது 12 மணித்தியால பயிற்சிக்கான	அரச செலவுகளை முகாமை செய்யும் பிரமாணத்தின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டு பயிற்சி வேலைத் திடட்ங்களுக்காக 5 மில்லியன் பெறுமதியான எதிர்பார்க்கை செலவுத் திடட் மொன்று முன்வைக்கப்பட்டாலும், திணைக்களத்திற்கு மிகவும் குறைந்த அளவிலான ஒதுக்கீடு மாத்திரமே

	சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தப்படாமை.	வழங்கப்பட்டது. இதன் காரணமாக பயிற்சி வேலைத் திட்டங்களுக்கு அலுவலர்களை அனுப்புகின்ற செயற்பாடு பிரச்சினைக்குரிய ஒன்றாகும்.
18	மனிதவள அபிவிருத்தித் திட்டத்தினை தயார்படுத்துகின்றபோது ஆற்றல் மறறும் திறன் விருத்தி செயற்பாடடினை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் சிரேஸ்ட உததியோகத்தர் ஒருவர் பெயர் குறிப்பிடப்படாமை.	மனிதவள அபிவிருத்தித் திட்டத்தினை தயார்படுத்துகின்றபோது ஆற்றல் மறறும் திறன் விருத்தி செயற்பாடடினை நடைமுறைப்படுத்துவதற்கு இலக்கம் LCGD/AD/7/01-03(2021) மற்றும் 2021.03.15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சிரேஸ்ட ஊழியர் ஒருவரை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேறகொளள்ப்பட்டுள்ளன.
19	திடட்மிடப்பட்ட பயிற்சிக்கான சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருக்கும் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களின் அளவானது 50% இனை விடவும் குறைந்த நிலையில் காணப்பட்டமை.	அரச செலவு முகாமைத்துவக் கொளகை கக்குள் பயிற்சிப் பாடநெறிகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கடீகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். இதனால் வழங்கப்படும் நிதி ஒதுக்கடீ களை சிரேஸ்ட நிலையைப் பூரணப்படுத்துவதறகு அவசியமான பாடநெறிகளின் பொருட்டே ஒதுக்க வேண்டி ஏற்பட்டது. எனவே திணைக்களத்தின் முழு ஊழியர் குழாத்தினருக்குமாக வழங்கப்படவிருந்த பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டன.
20	நிறுவனத்தின் கணக்கீடுகள் தொடரப்பான கணக்காய்வுக் கருத்தாடல்கள் பாதகமான நிலையில் காணப்படுகின்றமை.	2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு கருத்தானது நிலையியல் கணக்கீட்டு கருத்தாடலாகும்.
21	உததியோகத்தர்கள் மூலம் அரசுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நி.ஏ.156(1) இன் அடிப்படையில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேறகொளள்ாமை.	நி.ஏ.156(1) இன் அடிப்படையில் அனைத்து அறவீடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் அடிப்படையில் அரசகணக்காய்வுக் குழுவின் மூலம் பாராளுமன்றத்திற்குமுன்வைக்கப்பட்டஅறிக்கைதொடர்பிலானஅவதானிப்புகள் மற்றும் அதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்டதீர்மானங்களைமுன்வைத்தல்

பாராளுமன்ற அமர்வு இலக்கம் : - 290

நிறுவனத்தின் பெயர் : - காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சரி செய்வதற்கு நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள்
01	கணக்காய்வாளர் நாயகத்தின் ஐய வினாக்களுக்கும் உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்துக்குள் மறுமொழிகள் சமர்ப்பிக்கப்படாமை.	சம்பந்தப்பட்ட பிரதேச தலைவர்களை அழைத்துக் கலந்தாலோசித்து தாமதமாகிய ஐய வினாக்களுக்கான மறுமொழிகளைத் தயாரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
02	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உப பிரிவு 40 (4) இற்கு இணங்க 01.08.2018 ஆம் திகதி முதல் கணக்காய்வு முகாமைத்துவத் திணைக்களத்துக்கு உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்காமை	07.10.2020 ஆந் திகதி முன்னாள் உள்ளக கணக்காய்வாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதுடன் தற்போதைய பிரதம உள்ளக கணக்காய்வாளர் 12.10.2021 ஆந் திகதியே கடமைக்குச் சமுகமளித்துள்ளார். ஆயினும் டிசம்பர் நடுப்பகுதியளவிலேயே நிரந்தர ஊழியர் வழங்கப்பட்டுள்ளபடியால் குறித்த இடர்வரைவு பட்டியல் மற்றும் காணக்காய்வுத் திட்டம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்சமயம் உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகள் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
03	நிதிப்பிரணமாணங்களின் 134 (3) ஆம் பிரிவின் படி உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை	குறித்த காலப்பகுதியில் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் காணப்படாமையினால் ஐய வினா அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
04	நிதிப்பிரணமாணங்களின் 134 (2) ஆம் பிரிவின் படி உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை	குறித்த காலப்பகுதியில் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் காணப்படாமையினால் ஐய வினா அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
05	கணக்காய்வுக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றுக்கான கூட்டங்கள் குறைந்தபட்சம் இரண்டாவது நடத்தப்படாமை	2021 ஆம் ஆண்டின் முதலாவது கூட்டம் 27.07.2021 ஆந் திகதி நடாத்தப்பட்டதோடு இறுதிக் கூட்டம் 15.12.2021 அன்று நடாத்தப்பட்டது.

06	26.06.2017 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைவாக சொத்துகள் கொள்வனவு செய்தமை நீக்கியமை பற்றிய தகவல்களைக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்காமை	குறித்த சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
07	அனைத்து வாகனங்களுக்குமான உரித்துடைமையினையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் இன்மை.	65-0745 இலக்கம் கொண்ட வாகனமானது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாயத் தாபனத்திற்குச் சொந்தமானதாகும். அவ்வுடைமையினைக் கைக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன
08	அனைத்து வாகனங்கிலும் அரச இலச்சினை பொறிக்கப்படாமை	அனைத்துத் தொகுதி வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது.
09	புறத்தொதுக்கப்பட்ட வாகனங்கள் 8 மாதங்களுக்கும் குறைந்த காலப்பகுதிக்குள் அகற்றப்படாமை	53-0049 ஆம் இலக்கம் கொண்ட இரட்டை கப் ரக வாகனம் அகற்றப்படுவதற்காக காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
10	வாகனப் பதிவேட்டுப் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்படாமலும் பேணிவரப்படாமலும் உள்ளமை	தற்போது வாகனப் பதிவேட்டுப் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
11	நிதிப் பிரமாணங்களின் பிரிவு 103, 109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் அரச வாகன விபத்துகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை.	PC-2375, PF-7866 இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
12	29.12.2016 ஆந் திகதிய 2016/30 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் அத்தியாயம் 3.1 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் உடைமையிலுள்ள வாகனங்களது எரிபொருள் நுகர்ச்சியைப் பரிசோதனை செய்வது மேற்கொள்ளப்படாதுள்ளமை.	இதுவரையில் 18 வாகனங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் பரிசோதிக்கப்படாதுள்ள எஞ்சிய வாகனங்களுக்கான பரிசோதனை நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.
13	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட வேண்டிய மிகுதிகள் நிதிப்பிரமாணங்களின் அடிப்படையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்ப்பனவு செய்யப்படாதுள்ளமை	நிதிப் பிரமாணங்களினடிப்படையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
14	ஒரு வருடத்துக்கும் அதிகமாக நிலுவைக் கடன் மிகுதிகள் காணப்படுகின்றமை	இறப்பெய்திய அலுவலர் திரு.பி.எல்.எல்.டி.சில்வா உடைய ரூபா. 19,546/- கடன் மிகுதி மாதாந்தம் மீளப்பெறப்பட்டு 2022 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதமளவில் மீதி கடன் முழுவதும் மீளப்பெறப்பட்டுள்ளது. ஓய்வூதிய அலுவலர் திரு. எச்.கே.சி.டயஸ் என்பவரது கடன் மீதியாகிய ரூபா 197,178/- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவிலிருந்து மீளப்பெறப்பட்டுள்ளது. இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர் திரு. யு.ஜி.ஜயவர்த்தன என்பவரது தொகை

		ரூபா. 93,730/- அவருக்கு 30.12.2016 ஆந் திகதி முதல் கட்டாய விடுப்பு வழங்கப்பட்டதுடன் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் 22.03.2017 ஆந் திகதி முதல் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவ்வலுவலருக்கு எதிராக நீதிமன்றம் இலஞ்சக் குற்றச்சாட்டை விசாரித்து மேற்கொள்கின்ற தீர்மானத்துக்கு ஏற்ப எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உட்பட்டு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உத்தியோகபூர்வ ஒழுக்காற்று விசாரணையின் இறுதி அறிக்கையும் குற்றப் பத்திரிகையும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஒழுக்காற்று அதிகாரியினால் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்ட பின்னர் குறித்த மீதியை மீளப்பெறுவதற்கான அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
15	அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்கு மிகுதிகளை இணக்கப்படுத்துகின்ற கட்டுநிதி இணக்கக் கூற்று காலாண்டுக்கொருமுறையான திறைசேரி ஏடுகளுடன் சேர்த்து திறைசேரி நடவடிக்கைகளுக்கான திணைக்களத்துக்குக் குறித்த திகதியில் அனுப்பப்படாதுள்ளமை.	2022 ஆம் ஆண்டு முதல் திறைசேரி நடவடிக்கைகளுக்கான திணைக்களத்துக்கு அவை அனுப்பிவைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
16	கட்டுநிதி இணக்கக் கூற்று மூலம் வெளிப்படுத்தப்பட்ட மாற்றங்களை இனங்காண்பதற்கும் அவற்றைத் திருத்தியமைப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை	2022 ஆம் ஆண்டு முதல் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
17	அனுமதிக்கப்பட்ட அளவை மீறி ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளமை	ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பதவி வெற்றிடங்கள் காணப்பட்டே திணைக்களம் இயங்கியது. 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு வினாக்கொத்து நிரப்பப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உப மூீஜ மட்டம் 1 இன் பகுதி 01, 19 களில் தவறுதலாக "இல்லை" என்று நிரப்பப்பட்டுள்ளது. அதற்குரிய உண்மையான மறுமொழி "ஆம்" என்றே நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எனவே, அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அப்பால் ஊழியர் ஆட்சேர்ப்பு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
18	தகவலுக்கான உரிமைச் சட்டத்தினடிப்படையில் அலுவலகத்தின் தகவலை வழங்குவதற்கென்று தனியான அலுவலர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. தகவலுக்கான உரிமைச் சட்டம் பற்றிய வழங்கப்பட்ட/வழங்கப்படாதுள்ள விடயங்களைக் குறித்து வைக்கின்ற பதிவேடு எதுவும் பேணப்படாமை. இது விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விளக்கி கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்படாதுள்ளமை குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளைக் கொண்ட ஆவணவாக்கம் மற்றும் பதிவுகள் போன்றவை பேணப்படாதுள்ளமை.	தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். பதிவுகள் பேணப்பட்டுவருகின்றன.

19	இனங்காணப்பட்ட பேண்தகு நோக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஈட்டிக்கொள்ள வேண்டிய இலக்குகள் நிர்ணயம் செய்யப்படாதுள்ளமை. இனங்காணப்பட்ட பேண்தகு நோக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்றங்கள் தொடர்பிலான வழிகாட்டல்கள் வகுக்கப்படாதுள்ளமை	1.4 ஆம் இலக்க நோக்கு தொடர்பில் அனைத்து ஆட்களுக்கும் சேவை அணுகுவதற்கான உரிமை விசேடமாக வறுமையால் அல்லலுறும் ஆட்கள், பொருளாதார ரீதியாக இடர்படும் ஆட்கள், அடிப்படை சேவைகள், காணி உரித்துடைமை, கட்டுப்பாடு ஏனைய சொத்து உரித்துடைமைகள், இயற்கை வளங்கள், 2023 ஆம் ஆண்டு வரையிலான நுண்நிதி உட்பட்ட நிதிச் சேவைகள் பேன்றவற்றை உறுதிப்படுத்திய இலக்காகவும் 1.4.2 இல் குறிப்பிடப்படுகின்ற வழிகாட்டியாகிய சட்டபூர்வ ஆவணங்கள் மூலமான வயது வந்த சனத்தொகையின் மொத்த எண்ணிக்கை, பால்மை அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட காணி உரித்துடைமைகள் போன்றவை திணைக்களத்துக்குத் தொடர்புபடுகின்றன. மேற்குறித்த நோக்கு தொடர்பில் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி வரையில் ஈட்டிக்கொள்ள வேண்டிய இலக்காக அரசாங்கத்தின் பூரண பொறுப்பின் கீழ் உரித்துச் சான்றிதழ் வழங்க வேண்டியது காணப்படுகின்றது. அதில் நில அளவைத்திணைக்களத்தினால் அளவை செய்யப்பட்ட கடத்திரள் வரைபடங்களின் இலக்கங்களுக்கு ஏற்ப காணிகளின் உரித்துடைமையாளர்களது உண்மையான மரபுவழிகாரர்கள் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கிவைக்கப்படுதல் வேண்டும்.
20	குடிமக்கள் பட்டயம் / சேவைபெறுநர் பட்டயம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமை.	குடிமக்கள் பட்டயம் / சேவைபெறுநர் பட்டயம் என்பன இந்நேரத்துக்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
21	நிறுவனத்தின் குடிமக்கள் பட்டயம் / சேவைபெறுநர் பட்டயம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறைமை ஒன்று நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்படாமை	மேற்பார்வைக்கும் மதிப்பீட்டுக்குமான முறைமை ஒன்று இந்நேரத்துக்கு வகுக்கப்பட்டுள்ளது.
22	02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட மனிதவள திட்டம் ஒன்று வகுக்கப்படாதுள்ளமை	மனிதவள திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
23	வகுக்கப்பட்டுள்ள மனிதவள திட்டத்தின்படி 50மூ ஊழியர்களுக்கு வருடத்துக்கு 12 மணித்தியாலங்களுக்கும் குறையாத வகையில் குறைந்தபட்ச பயிற்சியளிப்பு வாய்ப்பு உறுதிப்படுத்தப்படாதுள்ளமை	மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் பயிற்சியளிப்பு வகுக்கப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளது. வெளிக்கள அலுவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கான திறன் விருத்தி நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
24	அனைத்து ஊழியர்களதும் செயலாற்றல் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படாமலும் மேற்கொள்ளப்படாமலும் உள்ளமை	2021 ஆம் ஆண்டுக்கானது தயாரிக்கப்படாதிருப்பினும் 2023 ஆண்டுக்கானது தயாரிக்கப்பட்டுள்ளது.
25	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் விருத்தித்	அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு

	திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான முதுநிலை அலுவலர் ஒருவர் நிறுவனத்தில் பெயர்குறிக்கப்படாதுள்ளமை	அறியப்படுத்தப்பட்டுள்ளது.
26	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50மூ இற்கும் குறைவாகக் காணப்படுகின்றமை	தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டம் மற்றும் விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ஆகியவற்றினடிப்படையில் பெறப்பட்ட ஏற்பாடுகளின் படி பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
27	நிறுவனம் தொடர்பிலான கணக்காய்வு அபிப்பிராயம் பொறுப்புத்துறப்பு மட்டத்திலே அல்லது மோசமான மட்டத்திலே காணப்படுகின்றமை	2022 ஆம் ஆண்டுக்கான நிறுவனம் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியானதாகவும் உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயமாகவும் காணப்படுகின்றது.
28	சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம் எல்லா அலுவலர்களாலும் சமர்ப்பிக்கப்படாதுள்ளமை	சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம் சமர்ப்பிக்கடாதுள்ள அலுவலர்களுக்கு அது தொடர்பில் எழுத்துமூலம் அறியப்படுத்தப்பட்டுள்ளது.
29	அலுவலர்களால் அரசாங்கத்துக்கு ஏற்படுத்தப்பட்ட நட்டங்களுக்காக நிதிப் பிரமாணங்கள் 156 (1) இனடிப்படையில் மீள்பெறுகைகள் மேற்கொள்ளப்படாதுள்ளமை	2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுப் படிவ வினாக்கொத்து நிரப்பப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பகுதி 02, 11 இல் ளுரடி மூஜ மட்டம் 1 இற்கான மறுமொழி தவறுதலாக "ஆம்" என்று இடப்பட்டுள்ளது. ளுரடி மூஜ மட்டம் 2 2.1 இற்கான மறுமொழி "ஆம்" என்பதாக இருந்த போதிலும் அத்தகையவாறான நட்டங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.
30	உச்சபட்ச சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை முறையாக இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதுள்ளமை.	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான உள்ளக இடமாற்ற முறைமையினைத் தழுவியும் உரித்து விசாரணை அலுவலர்களுக்கான இடமாற்றமானது 02.05.2023 ஆந் திகதிய பொது சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படியும் 2023 ஆம் ஆண்டு முதற்கொண்டு அவ்விடயம் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நிலையியற் கட்டளை இல.119(4)க்கு அமைவாக பொதுக்கணக்குகள் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகளை சமர்ப்பித்தல்

பாராளுமன்ற தொடர் இல.: 290

நிறுவனத்தின் பெயர்: காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

நிதி மற்றும் செயற்திறன் மதிப்பீட்டில் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை திருத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ∴ தற்போதய நிலை
அனைத்து வாகனங்களினதும் உரிமையினை உறுதிபடுத்தும் பத்திரங்கள் இல்லை. அரச வாகனங்களினது விபத்துக்கள் தொடர்பான நி.பி. 103, 104, 109, 110 அமைவாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை	PJ 6947 மற்றும் PJ 6948 இலக்க 02 வாகனங்கள் தொடர்பான உரிமை இந்த திணைக்கனத்திற்குரியதுடன் அவ் வாகனங்கள் இரண்டும் நிதி குத்தகை முறையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான தவணைகள் செலுத்தி முடிவடையும் வரை பூரண உரிமை இலங்கை வங்கிக்குரியதுடன் தவணை செலுத்தி முடிவடைந்த பின்னர் இத் திணைக்களத்தினது பெயரிற்கு மாற்றிக் கொள்ள முடியும். மேலும் PK 7040 மற்றும் PK 7050 இலக்க வாகனங்கள் இரண்டும் திறைசேரியின் ஊடாக நிதி குத்தகை முறையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான தவணை செலுத்தி முடிவடைந்த பின்னர் பூரண உரிமையும் இத் திணைக்களத்தினது பெயரிற்கு மாற்றிக் கொள்ள முடியும். அதன்படி இத் திணைக்களத்திற்கு சொந்தமான ஏனைய வாகனங்கள் அனைத்தும் (28) திணைக்களத்தினது பணிப்பாளர் நாயகத்தினது பெயரில் பெறப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக அரச துறையினருக்கு விடுமுறை வழங்கியமை, அலுவலர்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டமையினால் அலுவலர்களை சுழற்சி முறையில் சேவைக்கு வரவழைக்கப்பட்டமையின் காரணமாக நி.பி. 103, 104, 109 ஆய்வுதளை மேற்கொள்ளல் மற்றும் அச் செயற்பாடுளை நிறைவு செய்வதற்கான செயற்பாட்டில் சிறிது தாமதம் ஏற்பட்ட போதிலும் தற்போது அப்பணிகள் நிறைவடைந்துள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

119(4) ஆம் இலக்கங் கொண்டநிலையானக் கட்டளைகளின் பிரகாரம் அரசகணக்குகள் செயற்குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பானஅவதானிப்புகளும்,எடுக்கப்பட்டநடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அமர்வு இலக்கம் : - 290

நிறுவனத்தின் பெயர் : - **இலங்கை நில அளவைத் திணைக்களம்**

நிதியாண்டிற்கானநிதிமற்றும் செயலாற்றுகைமதிப்பீட்டில் இனங்காணப்பட்டகுறைபாடுகள்	அக்குறைபாடுகள்/தற்போதையநிலைமையைசரிசெய்வதற்குஎடுக்கப்பட்டுள்ளநடவடிக்கைகள்
முதலாவதுபகுதி : 79.00	
01. நிதி தத்துவங்களை ஒப்படைக்கும் போது ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் குறைந்தபட்சம் இரண்டு உத்தியோகத்தர்களின் பரிசீலனைக்குட்பட்டு தத்துவங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	நிதித் தத்துவங்களை ஒப்படைக்கும் கடிதத்தின் பிரகாரம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் றகுறைந்தபட்சம் மூன்று பேர் உள்ளடங்கியதாக பரிசீலனைகளை மேற்கொள்ளும் முறையில் அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தத்துவத்தை வழங்குதலும் அங்கீகரித்தலும் ஒரே பதவிக்கு வங்கியிருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தத்துவத்தைவழங்கும் உத்தியோகத்தரினால் வவுச்சர் அங்கீகரிக்கப்படவில்லை.
02. கணக்காய்வாளர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் பதில்கள் வழங்குதலானது அவ்வாறு தாமதமாகாது, இருப்பினும் பிரதேச அலுவலக கணக்காய்வின் போது மேலதிக நிலஅளவையாளர் தலைமையதிபதியின் (கள) ஊடாக மாகாண நிலஅளவையாளர் தலைமையதிபதியின் ஊடாக மாவட்ட சிரேட்ட நிலஅளவை அதிகாரியின் ஊடாக பிரதேச அலுவலகங்களில் இருந்து பதில்களை பெற்றுக் கொள்வதற்கு தாமதங்கள் ஏற்படும்.
03. உள்ளக கணக்காய்வு விசாரணைக்காக ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	1. ஒவ்வொரு உள்ளககணக்காய்வு விசாரணைக்கும் பதில்கள் வழங்குவதற்கு ஒரு மாதத்தை விடவும் கூடுதலான காலத்தை எடுக்கா விடினும், பிரதேச அலுவலகங்களில் கணக்காய்வு விசாரணைகளை சமர்ப்பித்தலானது, மேலதிக நிலஅளவையாளர் தலைமையதிபதியின் (கள) ஊடாக மாகாண நிலஅளவையாளர் தலைமையதிபதியின் ஊடாக மாவட்ட சிரேட்ட நிலஅளவை அதிகாரியின் ஊடாக, நிலஅளவை அதிகாரிக்கு அனுப்பப்பட்டு மீண்டும் அவ் ஒழுங்கில் பதில்களை பெற்றுக்கொள்வதினால் சிறு தாமதம் ஏற்பட்டுள்ளது.
04. சகல வாகனங்களினதும் உரிமத்தை சான்றுப்படுத்தும் ஆவணங்கள் தம்வசம் இன்மை.	1. தற்போது 318 வாகனங்கள் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருப்பதோடு, அவற்றில் ஒரு வாகனத்தை தவிர ஏனைய சகல வாகனங்களினதும் உரிமத்தையும் சான்றுப்படுத்தும் எழுத்தாவணங்கள் தற்போது திணைக்களத்தில் காணப்படுகின்றன என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அவ்வாறே தற்போது உரிமத்தை சான்றுப்படுத்தும் ஆவணங்கள் இல்லாத வாகனத்தின் என்ஜின் இலக்கமானது 32-6741 உம் செசி இலக்கமானது அழிந்து போய் இருப்பதோடு. அவ் இலக்கத்தை சான்றுப்படுத்தி பதிவு உரிமத்தை எடுப்பதற்குத் தேவையான ஆவணங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதையும் தயவுடன் அறியத் தருகிறேன் (இணைப்பு 01).
05. சகல வாகனங்களுக்கும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	இத்திணைக்களத்தில் தற்போது காணப்படும் சகல வாகனங்களுக்கும் அரச இலட்சினையையும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ பெயரையும் மும்மொழிகளிலும் பொறிப்பதற்கான நடவடிக்கைகள்

	மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அதற்காக உரிய முறையில் பெறுகை நடவடிக்கைகள் நடைபெறுகின்றது என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.
06. சிதைவடைந்த வாகனமொன்று 8 மாதத்திற்குகு றைவான காலத்திற்குள் அகற்றப்படாமல் இருந்தது.	சிதைவடைந்த வாகனமொன்று 8 மாதத்திற்கு குறைவான காலத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என காலவரையறை குறிப்பிட்டிருப்பினும், பல படிமுறைகளின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது (பரிசீலனை குழு/மதிப்பீட்டுக் குழுவினை நியமித்தல், அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுதல்,வாகனங்களின் பதிவுகளை இரத்துச் செய்தல், விலைமனுக் கோரல் ஆகிய விடயங்களுக்கு அமைய) குறித்த குழுக்களின் தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்கு போதுமான காலம் தேவைப்படுவதோடு, இவ்வாறு குறித்த காலவரையறைக்குள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. எவ்வாறாயினும், தற்போது குறித்த வாகனங்கள் அனைத்தும் ஏலமிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.
07. சகல பணிக்குழுவினருக்கும் . எழுத்துமூலமாக கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது பணிக்குழுவினர் அனைவருக்கும் எழுத்துமூலமாக கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
பகுதி இரண்டு 92.00 08. தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தின் மூலம் பணிக்குழுவினர் 100 பேரில் 50 இற்கும் அதிகமானோருக்கு வருடமொன்றிற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலத்திற்கு குறைவான பயிற்சிகள் சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை	இதற்கான உரிய மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்து வழங்கப்படும் ஏற்பாடுகளின் வரையறைக்குள் ஆகக்கூடிய உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகளை பெறும் சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.
09. நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வு எண்ணக்கரு தகுதியற்றதாக அல்லது பாதகமாக உள்ளது.	திணைக்களத்தில் இருந்தபல்வேறுகுறைகள் மற்றும் குறைபாடுகளினால் இறுதிக் கணக்குகளில் அவற்றினை வெளிப்படுத்தும் வகையில் எண்ணக்கரு தகுதியற்றதாக இருப்பினும்,2022 ஆம் ஆண்டில் அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உண்மையானதும் நியாயமானதுமான எண்ணக்கருவினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹரீன் பிரனாந்து (பா.உ)

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்